## දමිළ ජනයා වෙනුවෙන් සිංහළ ජනයා සටන් නොකළෝය යන වාදය බොරුවකි

සිංහළ ජනයා දමිළ ජනයා වෙනුවෙන් සටන් නොකළෝය යන කරුණ වනාහී දමිළ අප අතර පවතින කුල භේදය තුරන් කිරීමට අප සටන් නොකළෙමු යන කරුණ වැනිම වූ කරුණකි. කුලවත් දමිළයා කෙසේ කුලහීන දමිළයා පාගමින් සිටින්නේද එවැනිම වූ ක්‍රියාවකි මහ ජාතියක් සුළු ජාතිය පෑගීම.

මේ දේශපාලන ක්‍රියාදාම හා සම්බන්ධ සත්‍යයන් වේ. මෙවන් සත්‍යයන් ගැන කතා නොකිරීම හා එවැනි දේ තිබීම පවා පිළිනොගෙන මගහරවමින් සිටීම දමිළ අපේ සිරිතක්ව පැවත එන්නේය. සත්‍යයේ එක් පැත්තක් පමණක් ලොවට පෙන්වමින් යමක් වෙනුවෙන් සටන් කිරීමෙහි ප්‍රතිඵලයක් ලෙසින් අප **විසින්**ම වසන් කරගෙන ඇති අපගේ මෙවන් මුසා නිතැතින්ම හෙළි වෙමින් පවතී.

එක් පාඨකයෙකු විසින් ***සිංහළයා සමග අපට එක්ව වාසය කරන්නට නොහැකිය*** යන මැයෙන් ලියන ලද ලිපියක ඔහු ඉදිරිපත් කළ තර්ක සියල්ල මෙසේ සත්‍යයේ එක් පැත්තක් පමණක් කියන්නකි. එමගින් ඔහු තවත් පැත්තක තිබෙන සත්‍යයන් වසන් කරයි. නොහොත් එය මග හරින්නට වෑයම් කරයි. පළමුවෙන් එසේ සිංහළයන් සමග එකට ජීවත් වීමට නොහැකිය යන ඔහුගේ තර්කය වෙනුවෙන් ඔහු ඉදිරිපත් කරන හේතු පළමුවෙන් අප අධ්‍යයනය කරමු.

1.මුල්ලිවායික්කාල් ප්‍රදේශයෙහි දමිළයන් 50,000 ක් ඝාතණය වූ විට ඒ සඳහා සිංහළයන් අතුරින් අඩුම වශයෙන් සියයට දහයක තරමක කොටසක් හෝ සිය කණගාටුව ප්‍රකාශ නොකළහ. මෙනිසා ඔවුන් සමග කොහෙත්ම අපට එක්ව වාසය කළ නොහැක.

2. ප්‍රබාකරන් ඇතුලු කොටීන් මුල්ලිවායිකාල්හි ඝාතණය වූ බව ආරංචි වූ විට  රට පුරා කිරි බත් හා රස කැවිලි බෙදමින් සිංහළයන් එයට ප්‍රීති ඝෝෂා පැවැත්වූ  නිසා ඔවුන් සමග අපට කොහෙත්ම එක්ව වාසය කළ නොහැක.

3. පොකුරු බෝම්බ හා මිසයිල එවමින් අහිසංක දමිළ ජනයා බුරුතු පිටින් වනසන අවස්ථාවෙහි සියලූම සිංහළ පත්‍රකරුවන් එය නුදුටුවාක් මෙන් සිටි විට එය පිළිබඳ නිර්භීතව කථා කරමින් ඒ නිසා සිය ජීවිතයද පි**දූ** ලසන්තගේ මරණයට කඳුළු නොසැලූ සිංහළ ජාතිය සමග කොහෙත්ම අපට එක්ව වාසය කළ නොහැක.

4.සුළුතරයෙනුත් සුළුතරයක් බවට පත් වී 20%ක් බවට හැකිලී සිටින දමිළ ජනයා කට නොහැර ලැබෙන දේ ගනිමින් නිහුඬව සිටිය යුතුය යන මතය පාර්ලිමේන්තුවේම ප්‍රසිද්ධියේ පවසන සිංහළයන් සමග අපට කොහෙත්ම එක්ව වාසය කළ නොහැක.

5. පසුගිය වකවානුවක ජාතික ගීය දමිළ බසින් ගායනා නොකළ යුතු යැයි කෑ කෝ ගසා එයට ඉඩ නුදුන් පසු එසේ නොකළ බව කියමින් නාඩගම් නැටූ සිංහළයන් සමග කොහෙත්ම අපට එක්ව වාසය කළ නොහැක.

6. ලංකාවේම උපන් දමිළ මිනිසුන් ලක්ෂ හතකට ප්‍රජා අයිතිය දීමට නොහැක යැයි 1952 වසරේ රජය කී විට එයට විරුද්ධ නොවුනු සිංහළයන් සමග කොහෙත්ම අපට එක්ව වාසය කළ නොහැක.

මෙසේ නිදහස ලැබුනු 1948 සිට සිදු වූ සිදුවීම් දහස් ගණනින් ඇත යැයි එම පාඨකයා සිය ලිපියෙහි සඳහන් කර තිබුනි.

එපමණක් නොව, බෝම්බ දමා දමිළයාගේ කන බිහිරි කර දැන් තමුන් කියන දෙයට දමිළ ජනයා සවන් නොදෙති යැයි කියන සිංහළයන් සමග කෙසේ එක්ව වාසය කළ හැක්කේදැයිද එම පාඨකයා වැඩිදුරටත් අසා තිබුනි.  අවසාන වශයෙන්, දමිළ ජනයා කිසි හිත් පිත් නැති රූකඩ මෙන් හා කිසිදු හැඟීමක් දැනීමක් නැති මළමිනි මෙන් ජීවත් වන්නට කැමති නම් පමණක් සිංහළයන් සමග එක්ව වාසය කළ හැකිය යැයිද ඔහු අවඥාවෙන් යුතුව පවසා තිබුනි.

සිංහළයන් සමග එක්ව වාසය කරන්නට බැරි කාරණා ලෙසින් ඔහු දක්වන්නේ මෙවැනි කාරණා නම් ලොව කිසිම ජන කොටසකට තවත් ජනකොටසක් සමග එක්ව වාසය කළ නොහැක. කොටින්ම කිවහොත් දමිළයා සමග දමිළයාට

වාසය කිරීමද කළ නොහැක. එයටව හේතු කාරණා දහසකුත් එකක් තිබේ. එයින් මෙන්න මා ඉදිරිපත් කරන ප්‍රධානතම හේතු:

1.තමාගේ උසස් කුලය පෙන්වමින් අඩු කුල දමිළයාට නිගා කරන උසස් කුල දමිළයා සමග කුලහීන දමිළයා එකට වාසය කරන්නේ කෙසේද?

2. යාපා පටුනේ සාඩම්බරය ගැන පුරසාරම් දොඩන දමිළයා සමග යාපු පටුනෙන් පිටත වාසය කරන දමිළයා සුහදව වාසය කරන්නේ කෙසේද?

3. සූරා කන දමිළයා සමග සූරා කනු ලබන දමිළයා එක්ව සතුටින් වාසය කරන්නේ කෙසේද?

දමිළයා සමග දමිළයා එක්ව වාසය කිරීමට ඇති සියලුම බාධක තුරන් කර කවදා හෝ අපට එක්ව වාසය කරන්නට හැකි නම් ඒදාට දමිළයාට සිංහළයා සමග එක්ව වාසය කිරීමද කළ හැකි වනු ඇත. එය කළ නොහැකි දෙයක් නම් සිංහළයා සමග එක්ව වාසය කිරීමද කළ නොහැක්කක්මය.

කුලය පෙන්වීමෙන් හෝ අන් ආකාරයකින් දමිළයාව තවත් දමිළයෙකු පාගන්නේය යන තත්ත්වය තිබෙන නිසා සිහංළයා සමග දමිළයාට එක්ව වාසය කිරීම යනු කළ හැක්කක්ය යන මතවාදය නිවැරදි වන්නේය.

එසේම නොයෙක් ආකාරයෙන් සිංහළයාව සූරන් කන සිංහළයන් සිටින තත්ත්වයක්ද තිබෙන නිසා හා එය අපරාධයක්ය යැයි සිතන සිංහළයන් බහුතරයක්ම සිටින නිසා සිංහළයන් සමග දමිළයන් එක්ව වාසය කිරීම යනු කළ හැක්කක්ය යන මතාවාදය නිවැරදි වන්නේමය.

මන්ද යත් සූරා කනු ලබන හා පාගනු ලබන ජනකොටසක් ලෙසින් පොදුවේ එක් ගොඩකට වැටී දුක් විඳින ජනකොටසක් සිංහළ හා දමිළ මිනිසුන්ගෙන් සැදුම් ලැබ අද ලංකාවේ සිටින හෙයිනි.  මෙයට ඔබ්බෙන් ඉස්මතු වන සිංහළ ජාතිවාදී හැඟීම් හා රට වෙන් කළ යුතුය යැයි ඇතැම් දමිළ කොටස් අතර ඇති පටු අදහස් එක හා සමාන සුව කළ නොහැකි අසාධ්‍ය රෝගයන් මෙනි.

දමිළයන්  අතර ඇති උස් පහත්කම් ගැන දමිළ අප කවදා හෝ හඩ නගා ඇත්තෙමුද? නැත. එවැනි භේදයක් අප අතර නැත්තා සේ රඟ පාමින් සිටින්නෙමු. සිංහළ බහුතරය අපට ඇති ජාතික ප්‍රශ්න ගැන නිහඬව සිටින්නේද මේ ආකාරයෙන්මය. නමුත් බහුතර ජාතියක් වන සිංහළයා සුළුතර අපට සමතැන් දිය යුතුය යැයි අප ඝෝෂා කරමින් සිටින්නෙමු. ඒ සඳහා ත්‍රස්තවාදය පවා අප පාවිච් කර බැලුවෙමු. මෙය කෙතරම් අසාධාරණද? මේ අතින් බලන කල සිංහළයාට වඩා අපව රවටමින් සිටින්නේ දමිළයාමය. ඒ අනුව මේ සියලු දේට මැසිවිලි නැඟීමට අපට ඇති යෝග්‍යතාවය කුමක්ද?

ලක්ෂයක් පමණ අහිංසක මුස්ලිම් ජනයාව ඔවුන් ඇඳ සිටි ඇඳුම් පමණක් ඔවුන්ට සන්තක කර උතුරු නැගෙනහිරෙන් අපගේ දමිළ ත්‍රස්ත නායකයන් එකම රැයකින් එළවා දැමූ විට දමිළ අප එම අයුක්තියට එරෙහිව හඬ නැගුවෙමුද? එසේ නොකළ අප වෙනුවෙන් සිංහළ ජනයා හඬ නැගිය යුතුය යැයි  අප බලාපොරොත්තු විය හැක්කේ කෙසේද? තවද එම මුස්ලිම් ජනයා දැන් ආපසු පැමිණි ඇති අතර ඔවුන් සමග එක්ව වාසය කිරීමට අපට කිසි අපහසුතාවයක් නැත්තා සේ සිටිමු. එසේ නම් යුද්ධයෙන් පසුව සිංහළ ජනයා සමග දැන් එක්ව වාසය කිරීමට අපටද කිසිදු අසීරුතාවයක් නොතිබිය යුතුය නොවේද?

මිනිසුන් මිනිසුන්ට එරෙහිව කිසිවක් නොකරති. එය කරනු ලබන්නේ යම් යම් සුවිශේෂි කොටස් විසිනි. සිංහළයා සමග වාසය කරන්නට බැරි යැයි කියන දමිළ මිනිසුන්මය ඒදා මුස්ලිම්වරුන්ව පළවා හැරියේ. එපමණක් නොව මායිම් ගම්මානවල වාසය කළ අහිංසක දුප්පත් සිංහළ පවුල් ඝාතණයේ කළේද එම දමිළයන්මය. තවද දමිළයන් අතර ඇති කුල භේදය තවමත් පෝෂණය කරමින් සිටින්නේද එම දමිළයන්මය. ත්‍රස්ත සමයෙහි සිය වරිගයාටම නොයෙක් පීඩන හා තහංචි ඇති කළේද ඔවුන්මය. මුස්ලිම් හා සිංහළ ජනයා ඝාතණය කරමින් ඔවුන් ජීවත් වන නගරවල, වාහනවල, පොදු ස්ථානවල, සිද්ධස්ථානවල, ගොඩනැගිලිවල බෝම්බ පුපුරවමින් කොටින් කළ කුරිරු ක්‍රියාවට එරෙහිව එදා හඬක් තබා වචනයක් හෝ දමිළ ජනයා කථා නොකළහ. එසේ කථා කර තිබුනහොත් සිංහළ ජනයා නිශ්චය වශයෙන්ම අප වෙනුවෙන් අද කථා කරනු ඇත. මෙයින් ගම්‍ය වන්නේ එසේ අන් අය අප වෙනුවෙන් කථා

කරනු ලැබීමට අප සුදුස්සන් නොවන බවයි. තවද ඉතිහාසගතව ඇති අප විසින්ම කරන ලද උක්ත නොමනා ක්‍රියා දැන් ආපසු හැරවියද නොහැක.

මෙහි සඳහන් කළ යුතු තවත් දෙයක් ඇත. කොටින් දමිළ ජනයාට හානි ඇති කරමින් සිදු කළ ඇතැම් මහජන විරෝධී ක්‍රියාවලට ඇතැම් දමිළ ක්‍රියාකාරීන් විරෝධය පෑ විට කොටින් එය විග්‍රහ කළේ ආණ්ඩුවට පන්දම් ඇල්ලීමක් ලෙසිනි. එසේ එම විරෝධතාවල යෙදුනු අයව කොටින් මරා දැමූහ. ඊලාම් ඉල්ලමින් කොටින් කළ ක්‍රියාවලට රජය ප්‍රහාර මගින් හා අන් ආකාරවලින් ප්‍රතිචාර දැක්වූයේද මෙවන් කෝණයකින්මය.

මෙලෙසින් කඳවුරු දෙකෙහිම නොකටයුතු සිදු වූ අතර පාර්ශවයන් දෙකම සත්‍යය හා යුක්තිය වළලා ඇත. ජන කොටස් එක්ව වාසය කිරීමට බාධා ඇති කළහ. අද දක්වා මිනිසුන් එකට වාසය කළ නොහැකි යන තර්කය මෞවන්නන් කියමින්ද සිටිති.

මේ අනුව මා අසන්නේ සිංහළයා සමග එක්ව වාසය කිරීම පැත්තක තබා, දමිළ ජනයා අතර ඇති උස් පහත්කම් නැති කිරීමට සටන් කිරීමට ඔබ සූදානම්ද? එයට මුළු හදින්ම ඔබ සූදානම් නැත යන සත්‍යයේ ප්‍රතිරාවයයි සිංහළයා සමග ඔබට එක්ව වාසය කරන්නට නොහැකිය යන ඔය වචනවලින් පිට වන්නේ. මෙම මතවාද දෙක එක සමාන වන අතර එය තුරන් කළ නොහැකි පරිදි මුල් බැස ඇත. මෙයයි සත්‍ය තත්ත්වය. අප යමකට අවංකව ඉදිරිපත් වන්නෙමු නම් අන් අයද එම කරුණ සඳහාම ඉදිරිපත් විය යුතු යැයි අපට බලාපොරොතු විය හැකිය. ඔවුන්ද එසේම එයට ඉදිරිපත් වනු ඇත. එයයි ස්වාභාවයේ ධර්ම න්‍යායය. කෙටියෙන් කිවහොත් අපට ඇති වී තිබෙන මෙම දුක අන් කිසිවක් නිසා නොව අප අන් අයව පාගන්නට ක්‍රියා කිරීම නිසා ඇති වුනු අනිසි ඵලවිපාකයයි. ඒ අනුව සිංහළ ජනයා ගැන තබා අන් කිසිවෙකු ගැනවත් කිරීමට අපට කිසිදු කිසිදු සුදුසුකමක් නැත.

නොකඩවා අපගේ මතවාදය වන්නේ එකට වාසය කරන්නට බැරිය යන වාදය නම් මුල්ලිවායික්ලා හැර අපට අන් කිසිවක් හිමි වන්නේද නැත. අප යෝග්‍ය වන්නේද එවැනි ඉරණමක්ය.

පී. ඉරයාහරන්

11/01/2011

## தமிழனுக்காக சிங்கள மக்கள் போராடவில்லை என்ற உண்மை, உன்னளவில் பொய்யானது

**நாங்கள் எமக்குள்ளான சாதியை ஒழிக்க நாம் போராடவில்லை என்ற உண்மை போல்தான், சிங்கள மக்கள் இனவொடுக்குமுறைக்கு எதிராக போராடவில்லை என்ற உண்மையும் கூட. தமிழன் பெயரால் உயர் சாதியம் எப்படி தாழ்ந்த சாதிய சமூக அமைப்பை தக்கவைத்து ஒடுக்கி வாழ்கின்றதோ, அப்படித்தான் இனவொடுக்குமுறையும் கூட.**

**அரசியல் நிகழ்தகவுகளில் உள்ள உண்மைகள் இவை. இப்படி பல உண்மைகளை மறுப்பது தான், எமது பொய்மையான எமது கருத்தாகவும், உணர்வாகவும் உள்ளது. ஒற்றை உண்மைகளை மட்டும் காட்டி**

கோருவதன் மூலம், வெளிப்படுவது கபடம் நிறைந்த பொய்மைகளும் புரட்டுகளும் தான்.

சிங்களவர்களுடன் நாங்கள் சேர்ந்து வாழமுடியாது என்று அம்பேதன் என்ற வாசகர், எம்மை நோக்கி அடுக்கிவைத்துள்ள காரணங்கள் அனைத்தும், ஒருபக்க உண்மையைக் கொண்டது. இதன் மூலம் பல பக்க உண்மைகளை தொடர்ந்து மறுத்தலாகும்.

"சிங்களவனுடன் நாம் சேர்ந்து வாழமுடியாது"!?" என்ற எனது கட்டுரைக்கு, இல்லை சேர்ந்து "வாழ முடியாது" என்று அடுக்கிவைக்கும் காரணங்களை முதலில் பார்ப்போம்.

"மாட்சிமை பொருந்திய உங்களின் மார்க்சியப் பார்வையில் தமிழர்கள் சிங்களர்களுடன் சேர்ந்து வாழ்வது முடியும் தான்.. ஏனென்றால்...

1.முள்ளிவாய்க்காலில் 50 ஆயிரம் பேர் செத்த போது பத்து சதவீதம் சிங்களர் கூட அதற்காக வருந்தவில்லையே அதனால் அவர்கள் கூட கண்டிப்பாக சேர்ந்து வாழத்தான் வேண்டும்.

2.எல்.டி.டி.இயும், பிரபாகரனும் சேர்ந்து செத்தார்கள் என்று முள்ளிவாய்க்காலில் இருந்து செய்தி வந்ததை தெருவெங்கும் மிட்டாய் கொடுத்து கொண்டாடினார்களே அவர்களுடன் சேர்ந்து ஏன் தமிழர்கள் வாழக்கூடாது என்று கணம் நீதிபதி அவர்களை நான் கேட்கிறேன்.

3.கொத்துக் குண்டுகளும், ஏவுகணைகளும் அப்பாவித் தமிழர்கள் மீது வீசப்பட்ட போது சிங்கள ஊடகங்கள் எல்லாம் பூசணிக்காய்களை சோற்றில் மறைத்தபோது துணிந்து எதிர்த்துப் பேசி செத்தானே லசந்தா என்னும் சிங்கள ஊடகவியலாளன். அவனுக்குக் கூட கண்ணீர் சிந்தாத இந்த சிங்கள மக்களுடன் தமிழர்கள் சேர்ந்து வாழத்தான் வேண்டும்.

4.மைனாரிட்டியிலும் மைனாரிட்டியாக 20 சதவீதமாக சுருங்கிப் போன தமிழர்கள் பொத்திக் கொண்டு கிடைக்கும் சோற்றில் வாழவேண்டும் என்ற நிலை இலங்கைப் பாராளுமன்றத்திலேயே நிலவும் மகா சனநாயக நாட்டில் தமிழர்கள் அவர்களோடு சேர்ந்து தான் வாழவேண்டும்.

5.சமீபத்தில் இலங்கை தேசிய கீதத்தை தமிழில் பாடக்கூடாது என்று சொல்லி தமிழ்நாட்டில் நாலு பேரும், இலங்கையில் நாலு பேரும் கத்தி மறுத்து அது உடனே அவர்களின் நூற்றாண்டு கால இன துவே~த்தை டபுக்கென்று மறைத்துக் கொண்டு இல்லையில்லை என்று

**நாடகமாடினார்களே அதற்காகவாவது தமிழர்கள் அவர்களோடு சேர்ந்து வாழத்தான் வேண்டும்.**

.....

**இது போல ஆயிரக்கணக்கான விசயங்கள் 1948 லிருந்து**

6. 1952**ல் ஏழு லட்சம் தமிழர்கள் இலங்கையிலேயே பிறந்திருந்தும் குடியுரிமை மறுக்கப்பட்டார்களே அப்போதும் எந்தச் சிங்கள இயக்கமும் ஆவேசமாய் சேர்ந்து போராட வரவில்லையே அவர்களுடன் சேர்ந்து வாழத்தான் வேண்டும்.**

**தமிழர்களின் காதில் வெடிகுண்டு வைத்து செவிடாக்கிவிட்டு, அடக்கம் பண்ணிவிட்டு, இப்போது செவிடன் காதில் ஊதும் சங்காக நீங்கள் அளந்து விடும் உள்ளடக்கம், பொருளடக்கம், சாராம்சம், என்ற மார்க்சிய வார்த்தைகளுக்குப் பணிந்து தமிழர்கள் எல்லாம் சிங்களருடன் சேர்ந்து வாழத்தான் வேண்டும் என்று அண்ணன் ராசபக்சேவின் கரம் பற்றி தாங்கள் கூறுவதை நான் வழிமொழிகிறேன்.**

**இவை எல்லாவற்றையும் தாண்டி இன்னும் சிங்களர்களுடன் சேர்ந்து வாழ்வது முடியும் தான். தமிழர்கள் எல்லாம் செத்த பிணங்கள் போல் உணர்ச்சியற்று, உணர்வற்று வாழும் நிலை வந்திருக்கும் இந்த வேளையில் கண்டிப்பாக முடியும் தான். வேறு வழியில்லையே. நல்லா இருங்க ராயகரன"**

**இக் காரணங்கள் தான் சிங்கள மக்களுடன் தமிழர்கள் சேர்ந்து வாழத்தடை என்றால், எந்த மக்கள் கூட்டமும் உலகில் சேர்ந்து வாழ முடியாது. தமிழன் தமிழனுடன் கூட சேர்ந்து வாழ முடியாது. இதுபோல் தமிழன் தமிழனுடன் சேர்ந்து வாழ முடியாத ஆயிரம் தடைகள் உண்டு.**

1.**சாதி பார்த்து தாழ்த்தும் உயர் சாதித் தமிழனுடன் எப்படி தாழ்ந்த சாதி தமிழன் சேர்ந்து வாழ முடியும்**!? **சொல்லுங்கள்.**

2.**யாழ் மேலாதிக்கம் பேசும் யாழ்ப்பாணியத் தமிழனுடன், எப்படி மற்றைய பிரதேச மக்கள் சேர்ந்து வாழ முடியும்**!? **சொல்லுங்கள்.**

3. **சுரண்டும் தமிழனுடன், சுரண்டப்படும் தமிழன் எப்படி ஏன்; சேர்ந்து வாழ வேண்டும்**!?

இப்படி தமிழன் தமிழனுடன் சேர்ந்து வாழ ஆயிரம் தடைகள் பல உண்டு. இதையும்; தாண்டி தமிழன் தமிழனுடன் சேர்ந்து வாழ முடியும் என்றால், சிங்கள மக்களுடன் கூட நாம் சேர்ந்து வாழ முடியும்.

தமிழனை தமிழன் ஒடுக்குவது பிழை என்று கருதும் தமிழர்கள் இருப்பதால் தான், தமிழன் சேர்ந்து வாழமுடியும் என்பது ஒரு உண்மையாகின்றது. இது போல் தமிழரை ஒடுக்குவதை பிழை என்று கருதும் சிங்களவரும் இருப்பதால் தான், சிங்கள மக்களுடன தமிழ் மக்கள் சேர்ந்து வாழ முடிகின்றது. வடக்கு கிழக்கு அல்லாத பிரதேசத்தில் வாழும் தமிழர்கள், சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழமுடிகின்றது. இந்த உண்மை சிங்கள மக்கள் தமிழருடன் சேர்ந்து வாழும் மனிதப் பண்பு சார்ந்த அரசியல் வெளிப்பாடாகும். இதற்கு மாறான பேரினவாத உணர்வுகள். அதாவது உங்களைப் போன்ற குறுந்தேசிய உணர்வுகள் போன்றது தான் பேரினவாத உணர்வுகள்.

நாங்கள் தமிழருக்குள் இருக்கின்ற சமூக ஒடுக்குமுறையை எதிர்த்து குரல்கொடுக்காதவராக இருக்கின்றது போல் தான், சிங்கள மக்களும் பொதுவில் வாழ்கின்றனர். தமிழனை தமிழன் ஒடுக்கும் ஒடுக்குமுறைக்கு எதிராக குரல்கொடுக்காத நாங்கள், சிங்கள மக்கள் எமக்காக குரல் கொடுக்காததைப் பற்றி பேச என்னதான் அருகதை இருக்கின்றது. பொய்மையிலும், புரட்டுகளிலும் தமிழனை தமிழன் ஒடுக்கும் வக்கிரத்தை கொண்டு, தமிழ் மக்களை ஏமாற்றுவதுதான் இவைகள்.

கடந்தகாலத்தில் ஒரு லட்சம் முஸ்லீம் மக்களை உடுத்த உடையைத் தவிர அனைத்தையும் புடுங்கி துரத்திய போது, நாங்கள் குரல் கொடுத்தோமா? இல்லை. இப்படியிருக்க ஏன் சிங்கள மக்கள் எமக்காக குரல் கொடுக்கவேண்டும்? அந்த மக்கள் தாங்களாகவே இன்று திரும்பி வந்ததுடன், மீளவும் சேர்ந்து வாழ்வது எப்படி சாத்தியமாகின்றதோ அப்படித்தான் அனைத்தும்.

மக்களுக்கு எதிராக மக்கள் எதையும் செய்தது கிடையாது. உங்களைப்; போன்றவர்கள் தான் அனைத்தையும் செய்தனர். அன்று சிங்களவனுடன் சேர்ந்து வாழமுடியாது என்று சொன்ன கூட்டம்தான், முஸ்லீம் மக்களை துரத்தியது. எல்லைப்புறங்களில் வாழ்ந்த மக்களை கொன்று குவித்தது. சாதியை ஒடுக்குமுறையை பாதுகாத்தது. தமிழ் மக்களை பல வழிகளில் ஒடுக்கியது. இன்றும் அதையே தொடர்ந்து நியாயப்படுத்துகின்றது. மக்கள் தாமாக பிரிவினையையும், பிளவையும், ஒடுக்குமுறையையும் தமக்குள் செய்யவில்லை. இப்படி மக்கள் விரோதத்தை முன்தள்ளிய உங்கள் பங்கை, வரலாற்றில் இருந்து இனி யாராலும் மறுக்க முடியாது.

கடந்த காலத்தில் புலிகள் எல்லைபுறங்களில் வாழ்ந்த சிங்கள முஸ்லீம் மக்களை கொன்றும், பயணிகள் பஸ்களை தகர்த்தும், பொது மக்களுக்குள் குண்டுகளை வெடிக்கவைத்தனர். இது போல் முஸ்லீம் மக்களை துரத்திய போது, நீங்கள் அதைக் கண்டித்து போராடியிருந்தால், சிங்கள மக்களும் உங்களைப் போல் செய்திருப்பார்கள். நீங்கள் ஏன் எதற்காக அதைச் செய்யவில்லையோ, அதுபோல் அவர்களும் செய்யவில்லை.

தமிழ் குறுந்தேசியவாதிகளும், புலிகளும்; மக்கள் விரோதமாக செய்த செயலைக் கண்டித்து போராடுவதை, நீங்கள் அரச கைக் கூலித்தனமாகக் கூறினீர்கள். அதை துரோகமாக காட்டி, போராடியவர்களைக் போட்டுத் தள்ளினீர்கள். இதுபோல் தான் அரசும் தன்னைக் கண்டிப்பதை புலித்தனமாக முத்திரை குத்தி பேரினவாதமாக ஆட்டம் போட்டது. அங்கு இங்கும் உண்மைகள் இப்படித்தான் புதைக்கப்பட்டு இருக்கின்றது.

இப்படி இரண்டு தளத்திலும், உண்மைகள் பேசப்படுவது தடுக்கப்பட்டது. ஆளுக்காள் போட்டுத் தள்ளி, மக்கள் சேர்ந்து வாழ்வதை தடைசெய்தனர். இப்படி மக்களைப் பிளந்து செய்யும் அரசியல் தான், கோலோச்சியது, இன்றும் கோலோச்சுகின்றது. அதைத்தான் மறுபடியம் இங்கு சிங்களவனுடன் சேர்ந்து வாழமுடியாது என்று தொடர்ந்து முன்வைக்கப்படுகின்றது.

சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழ முடியாது என்று வைத்துக்கொள்வோம், தமிழன் தமிழனுடன் சேர்ந்து வாழ சாதியையும், பிரதேச வாதத்தையும், சுரண்டலையும், ஆணாதிக்கத்தையும் ஒழிக்க நீங்கள் தயாரா!? அதற்காக போராட நீங்கள் தயாரா? நீங்கள் அதற்கு தயாரில்லை என்ற உண்மைதான், சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழ தயாரற்ற தர்க்கமாகின்றது.

மக்கள் தம்மையொத்த மற்றவனைப் பிரிந்தும், பிளந்தும், ஒடுக்கியும் வாழ்வது என்பது அவர்களின் தேர்வல்ல. மற்றவனை ஒடுக்கியும், சுரண்டியும், தாழ்த்தியும் வாழ்வது, என்றும் மக்களின் தேர்வல்ல. எப்படி தமிழ் உயர் சாதியம், தாழ்ந்த சாதிய சமூக அமைப்பை தக்கவைத்து ஒடுக்கி வாழ்கின்றதோ அப்படித்தான் இனவொடுக்குமுறைகளும் கூட.

நாங்கள் எங்களுக்குள் ஒடுக்கும் சாதியை ஒழிக்க முன்வருவோம் என்றால், அதுபோல் சிங்கள மக்களும் இனவொடுக்குமுறையை ஒழிக்க முன்வருவார்கள். இதை மார்க்சியம் தான் சொல்லுகின்றது என்று கூறிவிடுவதால், இந்த உண்மை பொய்யாகிவிடுமா? நாங்கள் மற்றவனை ஒடுக்குவதுதான், அனைத்துக்குமான தடையாக உள்ளது. இப்படி உண்மையிருக்க சிங்கள சமூகத்தைப்பற்றி பேச, எந்த அருகதையும்

உரிமையும் எமக்கு கிடையாது. இப்படி எம்மைச் சுற்றிய உண்மைகள் இருக்க, நாம் மற்றவனிடம் கோருவது என்பது போலித்தனமானது, பொய்யானது, புரட்டுத்தனமானது. தொடர்ந்து இதுதான் தமிழ்தேசியம் என்றால், முள்ளிவாய்கால்களைத் தவிர வேறு எதையும் அது வழிகாட்டாது.

**பி.இரயாகரன்**

11.01.2011